16th March 1965]

என்ன காரியத்தைச் செய்தாவது தங்கள் அரசியல் செல்வாக்கை உயர்த்திக்கொள்ளவேண்டும் என்பதுதானே நோக்கம் என்பதைக் கனம் அமைச்சரிடமிருந்து அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது கனம் உறுப்பினரின் பிரசங்கம்.

திரு. இராம. அரங்கண்ணல் : ஆக்கிரமிப்புச் செய்யும் அந்நிய அரசுக்கு உடந்தையாக இருந்தார்கள் என்ற காரணத்தினுல் மட்டும்தானே இந்திய பாதுகாப்புச் சட்டம் உபயோகிக்கப்பட்டு இருக்கிறது. ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கெல்லாம் விவரமாக விடை அளிப்பதற்கில்லை.

Licensed powerlooms in the State.

* 246 *Q.*—SRI M. KALYANASUNDARAM :
SRI V. SANKARAN :
SRI T. P. ALAGAMUTHU : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of powerlooms licensed so far in the State; and

(*b*) the number of looms established in the co-operative sector?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Till the end of 1964, in Madras State, 6,921 powerlooms have been licensed in the decentralised sector and 78 powerlooms in the co-operative sector.

திரு. கே. ஏ. மதியழகன் : ஏற்கெனவே "அன்லைசன்ஸ்ட்" ஆக விசைத்தறிகள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் "ரெகுலரைஸ்" பண்ண எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன என்பதைக் கனம் அமைச்சர் விளக்குவாரா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 6,921 விசைத்தறிகள் அன் லைசன்ஸ்ட் ஆக இருந்தது. அதை எல்லாம் "ரெகுலரைஸ்" பண்ணி ஆகிவிட்டது. மத்திய சர்க்கார் ஒரு உத்தரவு போட்டார்கள். 1963-ம் வருடம் அக்டோபர் முதல் தேதி அன்று வரை "பவர்லூம்ஸ்" வேலை செய்து கொண்டிருந்தது என்றுல் அதை "ரெகுலரைஸ்" செய்யவேண்டு மென்று. அதன்படி செய்யப்பட்டு இருக்கிறது.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : இப்போது விசைத்தறிகளுக்கு லைசன்ஸ் கொடுப்பது நிறுத்தப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து : இந்த விசைத்தறிகள் அதிகமாவதன் மூலமாகக் கைத்தறிகள் பாதிக்கப்படுமே, ஆகையால் கைத்தறியைக் காப் பாற்ற விசைத்தறிகளை அதிகப்படுத்தாமல் இருப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது கொள்கை பூர்வமான ஒரு விஷயம். கைத்தறி மான்ய கோரிக்கை வரும்போது கனம் அங்கத்தினர் எழுப்பின கேள்விக்கு, கொள்கை என்ன என்று விவரமாகச் சொல்ல முடியும்.

இப்போது நம் ராஜ்யத்தில் மாத்திரம் விசைத் தறிகள் வேண்டாம் என்று சொல்லி பக்கத்திலுள்ள கேரளம், மைசூர், பம்பாய் போன்ற இதர ராஜ்யங்களிலிருந்து விசைத் தறிகளால் தயாரித்த துணிகளை நம் ராஜ்யத்திற்குள் வரவிட்டால் என்ன நிலைமை ஏற்படுமோ அது தான் விசைத் தறிகளை வைத்தால் நம் ராஜ்யத்திலும் ஏற்படும் என்று நினைக்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : இன்னும் திருப்பூர், குமாரபாளையம், போன்ற பகுதிகளில் "அன் லைசன்ஸ்ட்" பவர் லூம்ஸ் ஏராளமாக உள்ளன. அவைகளை எல்லாம் ரெகுலரைஸ் செய்ய என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : குறிப்பிட்ட தேதியில் பவர்லூம்ஸ் ஆக உள்ளதை லைசன்ஸ்ட் ஆகச் செய்துவிட்டோம். அதற்கப்புறம் தோன்றினவற்றை லைசென்ஸ்ட் ஆகச் செய்ய முடியாது என்பது இப்போது இருக்கிற நிலைமை.

புலவர் கா. கோவிந்தன் : நம்முடைய மாகாணத்திலே விசைத்தறிகளைக் கட்டுப்பாடுசெய்து மற்ற மாகாணங்களிலே தடை செய்யாமல் இருந்தால் அங்கிருந்து விசைத்தறியால் நெய்த துணிகள் நம் மாகாணத்திற்கு வந்தால், கைத்தறித் துணிகள் பாதிக்கப்படும் என்று அமைச்சர் கூறினார்கள். விசைத்தறியால் கைத்தறி பாதிக்கப்படும் என்பதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி என்றால் மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு தேச முழுவதிலுமே விசைத் தறிகளைக் குறைக்க வேண்டும் என்று அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நம் அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை சொல்லுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பவர் லூம்ஸ்களை அடியோடு கொண்டு வந்து செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணம் சர்க்காருக்குக் கிடையாது. பவர் லூம்ஸ்களை யார் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளவும் சர்க்கார் அனுமதி கிடையாது. மாநில சர்க்காரைப் பொறுத்த அளவில், நம்முடைய ராஜ்யத்திற்குக் கிடைக்கக்கூடிய விசைத்தறிகளில் பாதி (50 சத வீதம்) கூட்டுறவு செக்டாரிலும், பாக்கி இருக்கின்ற பாதி 50 சத வீதம் கைத்தறி நெசவில் ஈடுபட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கே கொடுத்தால் பாதகம் அதிகமாக இருக்காது என்று நாம் வகுத்து இருக்கிறோம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, விசைத் தறிகளைப் பயன்படுத்துவதைப் பொறுத்த வரையில், கைத்தறி போர்டின் கருத்து வந்திருக்கிறதா ? அதன் பேரில் அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதையெல்லாம் பற்றி கைத்தறி போர்டு பரிசீலனை செய்தார்கள். அவர்கள் பரிசீலனை செய்து சிபார்சு செய்தது தான் 50 சத வீதம் கூட்டுறவு செக்டாருக்கும், பாக்கி பாதி 50 சத வீதம் கைத்தறி நெசவில் சம்பந்தப்பட்டிருக்கிறவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்பது. அதைத்தான் சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

Irregular claims of rebate on handloom cloth

* 247 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there were any irregular bogus claims of rebate on the sale of handloom cloth during the years 1961–62 and 1962–63?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, there were 34 irregular rebate claims during 1961–62 and 142 claims during 1962–63.